சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 09.02.2026

வா.சா.3 –முத்துராமன் S/o முனியாண்டி

O.S. No.7/2023

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை **:**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. தை 2ம் தேதி 1952ம் ஆண்டு பொங்கல் அன்று பிறந்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் நீதிமன்றத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். மேற்படி முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் கண்ணதாசன் வழக்கறிஞரிடம் சொல்ல தயாரிக்கப்பட்டதா என்றால் இல்லை நான் சொல்ல சொல்ல தயாரிக்கப்பட்டது. சொக்கலிங்கம் இறந்த தேதி நினைவில்லை. ஆனால் சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் காலமாகிவிட்டார். சொக்கலிங்கத்தின் அம்மா பரமாயி எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் காலமாகிவிட்டார். பரமாயி யார்யாருக்கு எவ்வளவு சொத்துக்களை எந்தெந்த தேதியில் எழுதி கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு அம்பலக்காரன் பட்டியில் உள்ள பூர்விக சொத்திற்கான சர்வே நம்பர் 558/B2 சொத்துக்கள் உள்ளன. அவ்வாறு எனக்க சொத்துக்கள் இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அம்பலக்காரன் பட்டியில் எனக்கு சொத்து இருக்கிறது என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் அவ்வாறு

இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. முருகாண்டி என்பவருக்கு ஒரு மகள், மற்றும் மகனும் தான் வாரிசுகள் ஆவார். முருகாண்டியின் மகள் பெயர் மீனா, மகன் பெயர் சொக்கலிங்கம், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை ஆவார். முருகாண்டி எனக்கு தாத்தா முறையே கிடையாது என்றும் நான் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அய்யாவும், சொக்கலிங்கத்தின் அய்யாவும் ஒன்றாக பிறந்தவர்கள் ஆவார்கள். முருகாண்டி எப்போது இறந்தார் என்றால் எனக்கு சுமார் 4 வயது இருககும் போது இறந்துவிட்டார். எந்த ஆண்டு முருகாண்டி உயில் எழுதி வைத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உயிலானது எப்போது எங்குவைத்து எந்த சொத்திற்கா எழுதப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பரமாயி வழக்கு சொத்தை விற்பனை செய்துவிட்டதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நான் அவ்வாறு சொல்லவில்லை. பட்டா மாறுதல் செய்வதற்கு கருப்பணன் மனு கொடுத்த விபரம் தெரியும் என்று கூறியுள்ளேன் என்றும் எந்த தேதியில் மன தாக்கல் செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி மனுவிற்கு 2ம் வாதி கண்ணதாசன் ஆட்சேபித்தார். அவர் என்ன ஆட்சேபணை செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். கண்ணதாசன் அது தன்னுடைய சொத்து என்று ஆட்சேபணை செய்திருந்தார். சொக்கலிங்கம் ஆட்சேபணை செய்ததாக சொல்லிவிட்டு, தற்போது, கண்ணதாசன் ஆட்சேபித்தார் என்று தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் ஊர்மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் கருப்பணன் வேண்டுமென்றே சொத்தை பரமாயிடம் கிரையம் பெற்று வீரணன் இருக்கும் வரை பட்டா மாற்றம் செய்யாமல் இருந்தார் என்று நான் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறவே இல்லை. நான் கண்ணதாசன்

கேட்டுகொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக நான் முன்னுக்குபின் முரணாக பொய்சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்து எனக்கு ஒரு விபரமும் தெரியாது என்றும், வழக்கு சொத்தை பற்றியும் எனக்கு ஒருவிபரமும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.02.09 21:52:52 +0530

Sub Judge
Melur